


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.11.2024) தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை சார்பில், கோயம்புத்தூர், விளாங்குறிச்சியில் 158 கோடியே 32 இலட்சம் ரூபாய் செலவில் 2.94 இலட்சம் சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கணபதி பி.ராஜ்குமார், கே.ஈஸ்வரசாமி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜெயந்த், டிட்கோ மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் இரா.கண்ணன், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்திகுமார் பாடி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாட்டின் இன, மொழி, வரலாற்றையும், தி.மு.கழகத்தையும் கட்டிக் காக்கிற இளம் தலைவராக உதயநிதி ஸ்டாலின் உருவெடுத்து வருகிறார்!

## சைதை தேரடித் திடலில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேச்சு!

சென்னை, நவ.6–

சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஏற்பாட்டில் “உழைப்பின் இமயம் உதயநிதியால் கண்டறியப்பட்ட கழக களப்போரில் துணை நிற்கும் கருத்தியல் சொற்போர் வீரர்கள்” எனும் பொது தலைப்பின்கீழ் நேற்று முன்தினம் (4.11.2024) மாலை 5 மணி அளவில் சைதை தேரடி தேடலில் பொதுக்கூட்டம் எழுச்சியுடன் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ‘தனித்துவம் படைக்கும், இளைஞர் நலம்’ எனும் தலைப்பின் கீழ் நாமக்கல் மோகநிதி, ‘சரித்திரம் படைக்கும் சமூக நலம்’ தலைப்பின் கீழ்செங்கல்பட்டு சிவரஞ்சனி, ‘சாதனை படைக்கும் கல்வித்துறை’ எனும் தலைப்பின்கீழ் தஞ்சை வியானி விஸ்வா மற்றும் ‘மகத்துவம் படைக்கும் மருத்துவத்துறை’ எனும் தலைப்பின்கீழ் விருகை சந்தோஷ் ஜெய் ஆகிய இளம் பேச்சாளர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றினர். முன்னதாக அமைச்சர் மா.சுப்பிரமணியன் உரையாற்றினார்.

அவ்வுரை வருமாறு:

சைதாப்பேட்டைத் தொகுதியின் சிறப்புகளைப் பற்றி இங்கேப் பேசியவர்களெல்லாம் மிகச் சிறப்பாக எடுத்துச்சொன்னார்கள். நான் மேடையிலேயே வீற்றியிருக்கிறப்போது என் நினைவுகள் எல்லாம் பின்னோக்கிச் சென்றது. 1976–ஆம் ஆண்டின் இறுதிகளில், நெருக்கடி நிலைக்குப் பிறகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இதே மேடையில் உரையினைத் தொடங்கியிருக்கிறார். இந்த இடத்தில் அமைக்கப்பட்டிருந்த மேடை, இப்போது இந்த இடத்தில் நிரம்பி வழிகிற கூட்டத்தைப்போல் எழுச்சிக் கடலாய் நிரம்பியிருந்தது.

காரணீஸ்வரர் கோயில், இரயில்வே காலனி, குளக்கரையிலும் விழிபிதுங்கி நிற்பதைப் போல, கடலலையென எல்லா இடங்களிலும் நிரம்பி வழிந்தது. இப்போது எங்கே பார்த்தாலும், மனித தலைகளாய் நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோமோ, அதே போன்று கூட்டம், 1976–இன் இறுதிகளில் இதே வீதிகளில் இருந்தது. இக்கூட்டத்தைப் பொறுத்துக் கொள்ள முடியாத கயவர்கள், இந்தக் கூட்டத்தில் கல் வீசினார்கள். இரயில்வே காலனியிலிருந்து மாடுகளை அவிழ்த்துவிட்டு, கூட்டத்தைக் கலைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டார்கள். ’

### கலைஞருக்கு அரணாக நின்றவர்கள்!

தரையில் அமர்ந்திருந்த கூட்டத்தினரிடைய மாடுகள் விரைந்து வர எல்லோரும் சிதறி ஓடினார்கள். அப்போது 100க்கும் மேற்பட்ட கயவர்கள் கையில் தடிகளை வைத்துக்கொண்டு, அனைத்து குழல்விளக்குகளையும் அடித்து நொறுக்கிக்கொண்டே வந்தார்கள். மேடையிலேயே இருந்த 10, 15 தோழர்கள், இன்றைக்கும் நம்மிடையே வாழ்ந்துக்கொண்டிருக்கின்ற நகர் மணி போன்ற தோழர்கள் தலைவர் கலைஞர் அவர்களை சுற்றிக் கட்டிப்பிடித்து அவருக்கு அரணாக நின்றார்கள். அவருக்கு சிறு காயம் கூட ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் மிகுந்த கவனத்துடன் நின்றார்கள். எதிரில் என்னைப் போன்றவர்கள், கூட்டத்தைக் கேட்பதற்காக அரைக்கால் சட்டையோடு உட்கார்ந்திருந்தோம்.

சிதறி ஓடியவர்களில் நானும் ஒருவன். சிதறி ஓடிவிட்டோம். ரயில்வே காலனியை நோக்கி ஓடிவிட்டோம். ஒரு பத்து, பதினைந்து மணித்துணிகள் ஒரே அமளித்துமளி. இதோடு கூட்டம் முடிந்துவிட்டது என்று சென்றுவிட்டோம். ஆனால் ஓர் கரகரத்தக் காந்தக்குரல் மீண்டும் ஒலிக்கத் தொடங்கியது. இது பனங்காட்டு நரி, எந்த சலசலப்புக்கும் அஞ்சாது என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பேசத் தொடங்கினார்கள். மீண்டும் ஓடிவந்து இங்கே உட்கார்ந்து, கலைஞர் அவர்கள் பேசி முடிக்கிற வரை இங்கே உட்கார்ந்து, கேட்டோம். வரலாற்றில் ஓர் மிகச் சிறப்பான இடத்தை ஏற்படுத்திய இடம் சைதைத் தேரடி.

இந்தக் கூட்டத்தில் தான் நாமக்கல் மோகநிதி, செங்கல்பட்டு சிவரஞ்சனி, தஞ்சை வியானி விஸ்வா, அன்பிற்கினிய தம்பி சந்தோஷ் ஜெய் ஆகியோர் பேச இருக்கின்றனர். உண்மையில் இந்த மேடை என்பதை, சகோதரி தமிழச்சி தங்கபாண்டியன் எடுத்துச்சொன்னதைப் போல, இந்த மேடை ஓர் வரலாற்றுச் சிறப்புமிக்க மேடை. இந்த மேடையில் பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றிருக்கிறது. இன்றைக்குக் கொக்கரித்துக்கொண்டிருக்கிற சீமானுக்கு இடம் தந்து, ஒலிப்பெருக்கி அமைத்துக்கொடுத்ததும் இதே மேடைதான். அவரை அழைத்துவந்து பேச வைத்தவர்கள் சைதை அன்பரசனும், பாட்சாவும் இங்கே இருக்கிறார்கள்.

அதேபோல் திராவிடர் கழகத்தில் பிரச்சாரச் செயலாளராக இருக்கிற அருள்மொழி அவர்கள், இதே மேடையில் வந்து சென்னையில் முதன்முறையாகப் பேசினார். புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரின் பாடல்களை எடுத்துப் பாடி பேசியிருக்கிறார். ஆக அவரும் பேசிய இடம் இந்த சைதைத் தேரடி. அதேபோல் நம்முடைய புதுக்கோட்டை விஜயா, அவரது தந்தையோடு சின்னப் பெண்ணாக வந்து இங்கே பேசினார் என்பது ஓர் வரலாற்று சிறப்பு மிக்கப் பதிவு.

பலரை உருவாக்கிய மேடை. இன்னமும் பல்வேறு வரலாற்றுச் சிறப்புகள் இருக்கிறது. பேரறிஞர் அண்ணா பேசிய மேடை, தந்தை பெரியார் பேசிய மேடை, முத்தமிழறிஞர் கலைஞர் பலமுறை பேசிய மேடை, வணக்கத்திற்குரிய இன்றைய தமிழ்நாட்டின் முதலமைச்சர் பேசிய மேடை, துணை முதல்வர், கழகத்தின் எதிர்காலம் உதயநிதி பேசிய மேடை, இப்படி பலர் இந்த சைதைத் தேரடித் திடலில் பேசியிருக்கிறார்கள்.

### இந்த இயக்கம் யாரையும் கைவிடாது!

இதில் கழகத்தின் பேச்சாளர்களுக்கே சிறு அச்சம். 182 பேச்சாளர்கள் வந்திருக்கிறார்களே, இங்கு நான் அழைக்காமலே கழகத்தின் 5 பேச்சாளர்கள் வந்திருக்கிறார்கள். ஏனென்றால் இவ்வளவு நாட்களாக நாம் பேசாத பேச்சா, நம்மைவிட என்ன சிறப்பாக இவர்கள் பேசப் போகிறார்கள் என்பதை கண்காணிக்க இங்கே வந்திருக்கிறார்கள். நிச்சயமாக அவர்களுக்கு ஓர் நம்பிக்கைக்குச் சொல்வேன். இந்த இயக்கம் யாரையும் கைவிடாது.

தமிழ்நாட்டின் முதலமைச்சர் புதிதாக வந்திருக்கிற சொற்பொழிவாளர்களாக இருந்தாலும், ஏற்கெனவே கழகத்திற்காக உழைத்துக்கொண்டிருக்கிற உங்களுக்காக இருந்தாலும், ஒருவரையும் கைவிடாது இந்த இயக்கம் என்பதற்கு பல்வேறு உதாரணங்களைச் சொல்ல முடியும். மிக, மிக சாதாரணமான ஓர் ஏழ்மையானக் குடும்பத்தில் பிறந்த நானே, இந்த நிலைக்கு வந்திருக்கிறேன். எந்தக் குடும்பப் பின்னணியும் இல்லாமல், இந்த மேடையிலே வீற்றிருப்போருக்கு ஏதாவது ஓர் கழகப் பின்னனி இருக்கும். பொருளாதாரப் பின்னணி இருக்கும். ஆனால் உழைப்பு என்ற ஒரே வார்த்தையோடு இங்கே நான் நிற்க முடிகிறதென்றால், உங்களாலும் நிச்சயம் முடியும். சாதிக்க முடியும். இதில் எந்தவிதமான பயத்திற்கும் யாரும் ஆளாக வேண்டிய அவசியமும் இல்லை.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை இந்த 182 பேச்சாளர்கள் மட்டுமல்ல. இங்கே இருக்கிற ஒவ்வொருவருமே பேச்சாளர்கள்தான். இங்கே கூடி யிருக்கிற பல்லாயிரக்கணக்கானவர்களிடம் ஒலிபெருக்கியை தந்தால், ஒவ்வொருவரும் ஒரு மணி நேரம் பேசக்கூடிய தகுதி வாய்ந்தவர்கள், ஆற்றல் வாய்ந்தவர்கள், அந்த அளவிற்கான செய்திப் பதிவு எல்லோரிடத்திலும் இருக்கிறது.

கழக அரசின் சாதனைகளா? கழக அரசு நிறைவேற்றிப்போனத் திட்டங்களா? கொள்கைகளா? மொழியா? இனமானமா? இவற்றைப் பற்றியெல்லாம் ஒரு மணி நேரத்திற்குப் பேசுவதற்கு, ஒவ்வொருவருக்குமே, தகுதியும், திறமையும் இருக்கிறது. அந்த அளவிற்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிற பட்டைத் தீட்டிய வைரங்கள். அதில் மாற்றுக்கருத்திற்கிடமேயில்லை. தென் சென்னையைப் பொறுத்தவரை, ஐந்து சட்டமன்றத் தொகுதிகளைச் சார்ந்தவர்கள் மட்டுமே இருக்கிறார்கள். பதினொரு பகுதி கழகங்கள் இருக்கிறது. இரண்டு ஒன்றியக் கழகங்கள் இருக்கிறது. பகுதி கழக செயலாளர்கள் 11 பேர், பகுதி கழக நிர்வாகிகள் 65 பேர், மாவட்டப் பிரதிநிதிகள் 300 பேர், அதேபோல் வட்ட கழக நிர்வாகிகள், வட்ட செயற்குழு உறுப்பினர்கள் அதில் ஆயிரம் பேர் இருக்கிறார்கள்.

அதேபோல் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் 5 பேர், சட்டமன்ற உறுப்பினர்கள் 5 பேர், தலைமைக் கழக நிர்வாகிகள் 7 பேர், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் 138 பேர், அண்மையில் அணிக்கு ஆறு பேர் என்ற சராசரியாக அமைப்புகளை அறிவிக்க தொடங்கியிருக்கிறோம். தமிழ்நாட்டிலேயே முதன் முறையாக, முரசொலியில் முறையாக வந்திருக்கிறது. இன்னும் ஒரு வார காலத்தில் எட்டு அணிகள் வர இருக்கிறது. ஆக, நிர்வாகிகள் எல்லாம் வந்தால், அது மட்டுமே 1794 பேர். இப்படி இரண்டு ஒன்றியக் கழகங்கள் இருக்கிறது. அதைப் பொறுத்தவரை அதில் 128 கிளைக் கழகங்கள் இருக்கிறது. அதிலே நிர்வாகிகள், அதிலே செயற்குழு உறுப்பினர்கள், இதையெல்லாம் எடுத்தால், ஐந்தாயிரம் நிர்வாகிகள் இருக்கிற ஒரே மாவட்டம், சென்னை தெற்கு மாவட்டம்.

### 182 தெருமுனைக் கூட்டங்கள்!

இந்த ஐந்தாயிரம் பேரிடமும், இந்த நான்கு இளம் பேச்சாளர்களை வைத்துக் கூட்டத்தை நடத்து என்றால், ஐந்தாயிரம் பேராலும் இந்தக் கூட்டத்தை நடத்த முடியும். நடத்திப் பழக்கப்பட்டவர்கள், ஏற்கனவே அனுபவம் உள்ளவர்கள். இருந்தாலும், இந்தக் கூட்டத்தை மாவட்ட கழகத்தின் சார்பில் நடத்தியதற்கான காரணம், ஆங்கிலத்தில் ஓர் பழமொழி சொல்வார்கள், Well Begaining often என்று சொல்வார்கள்.

தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களும், இளைஞர் அணி செயலாளர் உதயநிதி அவர்களும், 182 பேருக்கு பரிசளித்து பேசும்போது சொன்னது, இவர்களுக்கு தமிழ்நாடு முழுவதும் பேசுவதற்கான அமைப்பை ஏற்படுத்திட வேண்டுமென்று, அறிவுறுத்தினார்கள். அந்த வகையில் முதல்களமாக நம்முடைய சென்னை தெற்கு இருக்க வேண்டும் என்ற வகையில் தான் இந்த மேடை இங்கே அமைக்கப்பட்டிருக்கிறது. நாம் இந்த நிகழ்வை இங்கே தொடங்கியதற்குப் பிறகு, திருத்தணி, ஈரோடு, சென்னை கிழக்கு என்று பல்வேறு மாவட்டங்களில் இதற்கான நிகழ்வுகள் தொடங்கினாலும், பொதுக்கூட்டத்தில் முதல் மூன்று பரிசுகளைப் பெற்ற பேச்சாளர்கள் பேசுகிற கூட்டம் இதுவாகத்தான் இருக்கும் என்று கருதுகிறேன்.

நான் நம்முடைய பிரபாகர் ராஜா அவர்களிடத்திலே சொன்னேன். வருகிற 27–ஆம் தேதி நம்முடைய இளைஞரணி செயலாளருடைய பிறந்தநாள் வருகிறது. சென்னை தெற்கில்தான், தமிழ்நாட்டின் முதல்வர் தளபதி அவர்களுக்கு, முதன்முதலில் பிறந்த நாள் கொண்டாடியது, ஆலயம்மன் கோயில் தெரு, ஆயிரம் விளக்கு, மகிஸ்கார்டன் ஆயிரம் விளக்கு இந்த இரண்டு இடங்களில்தான், 1985, 1986, 1987ஆம் ஆண்டுகளில் இன்றைய தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களுக்கு பிறந்தநாள் விழாக்கள் நடத்தப்பட்டது.

தொகுதியை விட்டு வெளியில் இன்றைய தமிழ்நாட்டின் முதல்வருக்கு பிறந்தநாள் விழா நடத்தப்பட்டது என்றால், அது சைதாப்பேட்டையில்தான், அதுவும் இளைஞர் எழுச்சிநாள் என்ற தலைப்போடு நடத்தப்பட்டது என்றால் சைதாப்பேட்டையில் தான். இன்னும் ஒரு கூடுதல் சிறப்பாக, இளைஞர் அணியின் செயலாளர், தமிழகத்தின் இனத்தை, மொழியை, கழகத்தை இன்னுமொரு அரை நூற்றாண்டுக்கு காக்கிற தலைவராக உருவெடுத்து வருகிற உதயநிதி அவர்களுடைய பிறந்தநாள் வருகிற 27 அன்று தொடங்கி டிசம்பர் 27 வரை ஒரு மாதக் காலம் 182 தெருமுனைக் கூட்டங்களோடு நடத்த இருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக்கொள்கிறேன்.

அது என்ன 182 என்று நீங்கள் கேட்கலாம். உதயநிதி அவர்கள் பேச்சுப் போட்டியை நடத்தி, அதில் தமிழ்நாடு முழுவதும் 17 ஆயிரம் பேர் பங்கேற்றார்கள். மாவட்ட அளவில் வெற்றிப் பெற்றவர்கள் ஆயிரக்கணக்கானோர். அதில் இறுதியாக மாநில அளவில் வெற்றி பெற்றவர்கள் 182 பேர். அந்த 182 பேரில் இப்போது இங்கே இருக்கிற 4 பேர் இருக்கிறார்கள். அந்த 182 பேரில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த வர்கள் இவர்கள். தென்சென்னையிலிருந்து 182 பேரில் ஒருவராக சென்றவர் சந்தோஷ் ஜெய். இந்த 182 பேச்சாளர்களும் பங்கேற்கிற வகையில் ஒரு நாளைக்கு ஆறு தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்கள், 30 நாட்களுக்கு 182 தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்கள் சென்னைத் தெற்கில், நான் சொன்னதைப் போல இதற்கு பகுதி கழகங்கள்தான் நடத்த வேண்டும். கிளைக் கழகம்தான் நடத்த வேண்டும். அல்லது பகுதிக் கழகத்தின் அனுமதியைப் பெற்றுத்தான் நடத்த வேண்டும் என்கின்ற நிலையெல்லாம் இந்த மாவட்டத்தில் இல்லை.

இந்த மாவட்டத்தில் எல்லோருமே ஒரு குடும்பத்தின் உறுப்பினர்களாக இருந்து, ஒருவொருக்கொருவர் விட்டுக்கொடுத்து நிகழ்ச்சிகளை நடத்துவதாக இருந்தாலும், அல்லது இயக்கப் பணிகளை ஆற்றுவதாக இருந்தாலும், மிகச் சிறப்பாக கடந்த ஏழு எட்டு ஆண்டுகளாக நடத்திக் கொண்டிருக்கிறீர்கள்.

அந்த வகையில் உங்களுக்கு யாருக்கெல்லாம் கூட்டம் நடத்த விருப்பமோ, பெரிய பிரம்மாண்டமான ஏற்பாடெல்லாம் தேவையில்லை. 82 வட்டங்கள் இருக்கிறது நம்முடைய மாவட்டத்தில், இந்த 82 வட்டங்களிலும் இந்தக் கூட்டம் நடத்தப்பட வேண்டும். இரண்டு ஒன்றியங்களிலும் உள்ள மூன்று ஊராட்சிகள், ஏழு ஊராட்சிகள் சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதிகளிலும் இருக்கிறது. ஆக பத்து இடங்களிலும் 10 கூட்டங்கள், ஒரு வட்டத்தில் ஒன்று தான் நடத்தவேண்டுமென்பதில்லை. மூன்று, நான்குக் கூட்டங்கள் கூட நடத்தலாம். எல்லோரும் நடத்தலாம். 1794 அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் போட்டிருக்கிறோம். இதில் யாராவது கூட்டம் நடத்தலாம் என்றால், பகுதி செயலாளர்கள் அனுமதி வழங்குவார். இப்படிக் கூட்டம் நடத்த விரும்புபவர்கள் சைதை சாதிக்கிடம் முன் பதிவு செய்துவிடுங்கள். யார் யார் பேச்சாளர்கள் என்பதை நாங்கள் 20–ஆம் தேதிக்குப் பிறகு அறிவிக்கிறோம். அதில் கழகத்தின் பழையக் கட்சி பேச்சாளர்களும் இருப்பார்கள்.

தலைமைக் கழகப் பேச்சாளர் ஒருவர், இளம் பேச்சாளர் ஒருவர் என்கிற வகையில் 30 நாட்களும், 182 கூட்டங்கள் விளம்பரப் படுத்தி, அதில் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் புகழ்பாடுகிற கூட்டங்களாக இருக்க வேண்டும் என்கிற வகையில் நடத்த இருக்கிறோம். வருகை தந்திருக்கிற நீங்களும், இந்தக் கூட்டத்திற்கு எப்படி எழுச்சியோடு வருகைத் தந்தியிருக்கிறீர்களோ, அதேபோன்று அந்தக் கூட்டத்தையும் சிறப்பிப்பதற்கு அனைத்துப் பகுதிகளிலும் திரண்டு, கூட்டத்தை நடத்தித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் உரையாற்றினார்.






### மு.க.தமிழரசு – நே.சிற்றரசு – தயாநிதி மாறன் – அன்பகம் கலை – நா.எழிலன் – கௌதமன் பங்கேற்பு!

# ஆயிரம் விளக்கு மேற்குப் பகுதி வட்டச் செயலாளர்கள் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் வினோத் வேலாயுதம் அறிக்கை!

சென்னை, நவ.6-

ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி கழகச் செயலாளர் வினோத் வேலாயுதம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சரும், கழகத் தலைவருமான தளபதி அவர்கள் மற்றும் கழக இளைஞர் அணி செயலாளரும் துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் ஆகியோர்களின் ஆணைக்கிணங்க சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி வட்ட செயலாளர்கள் கூட்டம் இன்று (06.11.2024 - புதன்கிழமை) மாலை 6:30 மணி அளவில் புலியூர் 2வது சந்து கோடம்பாக்கம், பகுதி கழக அலுவலகத்தில் பகுதி அவைத் தலைவர் புவி.பாலாஜி தலைமையில் நடைபெறுகிறது.

இதில் மு.க.தமிழரசு, மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி, விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி, கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ, ஆயிரம் விளக்கு தொகுதி பொறுப்பாளர் கௌதமன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இக்கூட்டதிற்கு பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள் ஆகியோர் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : கழக இளைஞரணி செயலாளரும் துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா, பிஎல்ஏ 2 / பிஎல்சி மற்றும் வாக்காளர் பட்டியல் சரி பார்த்தல், கழக ஆக்கப்பணிகள்

இவ்வாறு ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி திமுக பகுதி கழக செயலாளர் வினோத் வேலாயுதம் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### தொகுதிப் பார்வையாளர் கௌதமன் ஆலோசனை வழங்குகிறார்!

# ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி வட்டச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## நே.சிற்றரசு - தயாநிதி மாறன் - அன்பகம் கலை - எழிலன் நாகநாதன் பங்கேற்பு!

சென்னை, நவ.6-

தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் ஆணைக்கினங்க துணை முதல்வர் இளம் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி வட்டச் செயலாளர்கள் கூட்டம் இன்று (6-11-2024, புதன்கிழமை) மாலை 5.00 மணியளவில் இளங்கோ சாலையில் அமைந்துள்ள பகுதி கழக அலுவலகத்தில் பகுதி அவைத்தலைவர் எம்.ஆர். ஐம்புலிங்கம் தலைமையில் நடைபெறுகிறது .

இக்கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் நாகநாதன் ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கிறார்கள்.

ஆயிரம் விளக்கு தொகுதி பார்வையாளர் கௌதமன் ஆலோசனை வழங்குகிறார்.

எனவே இக்கூட்டத்திற்கு பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கு மாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா. வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு. கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி செயலாளர் மா.பா.அன்புதுரை அறிவித்துள்ளார்.




சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஏற்பாட்டில் ”உழைப்பின் இமயம் உதயநிதியால் கண்டறியப்பட்ட கழக களப்போரில் துணை நிற்கும் கருத்தியல் சொற்போர் வீரர்கள் எனும் பொது தலைப்பின்கீழ் நேற்று 4–11–2024 மாலை சைதை தேரடி திடலில் பொதுக்கூட்டம் எழுச்சியுடன் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தனித்துவம் படைக்கும் இளைஞர் நலம் எனும் தலைப்பின் கீழ்– நாமக்கல் மோகநிதி, சரித்திரம் படைக்கும் சமூக நலம் தலைப்பின் கீழ்– செங்கல்பட்டு சிவரஞ்சனி, சாதனை படைக்கும் கல்வித்துறை எனும் தலைப்பின் கீழ் – தஞ்சை வியானி விஸ்வா மற்றும் மகத்துவம் படைக்கும் மருத்துவத் துறை எனும் தலைப்பின்கீழ் – விருகை சந்தோஷ் ஜெய் ஆகிய இளம் பேச்சாளர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றினர். இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், துணைமேயர் மு.மகேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த்ரமேஷ், காரம்பாக்கம் கணபதி, ஏ.எம்.வி பிரபாகராஜா, தலைமை செயற்குழு உறுப்பினர் க.தனசேகரன், பாலவாக்கம் க.சோமு, வேளச்சேரி பி.மணிமாறன், காசி முத்துமாணிக்கம், மாவட்டத் துணைச் செயலாளர்கள் பாலவாக்கம் த.விஸ்வநாதன், பாலவாக்கம் மு.மனோகரன் வாசுகி பாண்டியன், மாவட்ட பொருளாளர் வேளச்சேரி எஸ்.பாஸ்கரன் பகுதி கழக செயலாளர்கள் எம். கிருஷ்ணமூர்த்தி, இரா. துரைராஜ் கே.கண்ணன், மு. ராசா, துரை.கபிலன், நொளம்பூர் வே.ராஜன், பெருங்குடி எஸ்.வி.ரவிச்சந்திரன், வி.இ.மதியழகன் ஒன்றிய கழகச் செயலாளர்கள் துரை வீரமணி, கோவிலம்பாக்கம் வெங்கடேசன் உள்ளிட்ட சென்னை தெற்கு மாவட்டத்தினர் திரளாகப் பங்கேற்றனர்.